**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**
**<u>அ.வ.எண். 313/2006</u>**

இந்நீதிமன்றத்து உதவியாளர் திரு.சு. குணசேகரன் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமுலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2025**–ஆம் ஆண்டு ஜுன் மாதம் **18**– ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி – 18.06.2025**

**பெயர் – சுஜாதா**

**க/பெ – சிவக்குமார்**

**சாட்சி – PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்– 2.45. பி.எம்**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

8. எனது தாயார் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் கிரையப்பத்திரத்தின் தேதி 24.11.1979 என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் தான் நான் இவ்வழக்கின் முதலாவது ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதே தேதியிலேயே எனது பாட்டியார் வனரோஜம்மாள், எனது தந்தையார் புல எண் 184/3–ன் அருகில் 19 செண்ட் நிலத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அந்த இடம் நிலம் அல்ல அது எனது தந்தையார் வாழ்ந்த வீடு ஆகும். அந்த 19 செண்ட் முழு விஸ்தீரனம் 56 செண்ட் என்றால் எனக்கு சரியாக தெரியாது.

9. எனது தந்தையாருடன் பிறந்தவர்கள் லட்சுமிபதி, லட்சுமி நாராயணன் மற்றும் ராம்குமார் என்றால் சரிதான் **(வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார்).** குமாரி என்பதன் முழு பெயர் தேவகுமாரி என்றால் சரிதான். இந்த வழக்கில் உள்ள முதல் பிரதிவாதி இராதாகிருஷ்ணநாயுடுடன் என் தாயார் சாந்தகுமாரி, எனது தந்தையார் பி.வி.எல். நாராயணன் ஆகியோருக்கு எதிராக எனது பாட்டி வனரோஜம்மாள் தாக்கல் செய்த வழக்கில் உறவுமுறை பற்றிய விவரங்கள் உள்ளன என்றால் சரிதான். அந்த வழக்கின் முடிவின் சுருக்க உரையை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான்.

10. அந்த வழக்கில் எனது பாட்டி வனரோஜம்மாள் அவரின் தாயாரான அன்னம்மாள் என்கிற விஜயலட்சுமிக்கு சொந்தமான சொத்தை வாங்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்சொன்ன சொத்தை வாங்கியதாக குறிப்பிட்ட 1920 ஆம் ஆண்டு அனுப்பம்பட்டு கிராமம் சுரோத்திரியம் கிராமமாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1962–க்கு பிறகு விஜயலட்சமி அம்மாள் இறந்த பிறகு வனரோஜம்மாள் மட்டும் தான் வாரிசு என்றால் சரிதான். வனரோஜம்மாள் பெயரில் 147/208 என்ற

எண்ணில் பட்டா உள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த இடத்தில் வனரோஜம்மாவாள் ஆழ்துளை கிணறு போடப்பட்டது என்றால் சரிதான்.

11. அந்த ஆழ்துளை கிணற்றில் நாளடைவில் தண்ணீர் வரவில்லை என்றால் சரியாக தெரியாது. அந்த வழக்கில் எனது தந்தையார் தான் எனது பாட்டியாருக்கு சொத்தில் பயிர் செய்ய உதவியாக இருந்ததாக கூறப்பட்டது என்றால் சரிதான். எனது பாட்டியாருக்கு கண் பார்வை சரியாக தெரியாது என்று வழக்கில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது குறித்து சரியாக தெரியாது. வழக்கு சொத்திற்கான வருவாய் கிஸ்துகளை எனது தந்தையார் தான் செலுத்தி வந்தார் என்றால் அது குறித்து சரியாக தெரியாது.

12. பாசன வசதி சரியாக இல்லாத காரணத்தினால் தான் விவசாயம் செய்யவில்லை என்று எனது பாட்டியார் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. வனரோஜம்மாள் உரிமையாளராக இருந்திருந்தாலும் கூட அந்த இடங்கள் விவசாயம் செய்யாமல் கரம்பு நிலமாக இருந்தது என்று எனது பாட்டியார் வழக்குரையில் தெரிவித்துள்ளார் என்றால் எனக்கு அது குறித்து தெரியவில்லை. **(அந்த அசல் வழக்கு எண் 313/2006 வழக்குரை பி.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. நான் மேற்சொன்ன ஸ்வாதீன அனுபவங்கள் எல்லாம் நேரடியாக எனக்கு தெரியாது எனது தந்தையார் கூறியதன் பெயரில் தான் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

13. அந்த முன் வழக்கில் எனது பாட்டியார் வயது முதிர்வின் காரணமாக எனது தந்தையார் வரிகளை செலுத்தியதாகவும், 1979 ல் தவறான நோக்கத்துடன் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் தவறு. எனது தந்தையாரும் எனது தாயரும் இவ்வழக்கின் முதலாம் பிரதிவாயன இராதாகிருஷ்ணநாயுடுவும் கூட்டு சதி செய்து எனது பாட்டியாரான வனரோஜம்மாளை ஏமாற்றி தான் கிரையம் பெற்றார்கள் என்று மேற்சொன்ன வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பாட்டியார் லட்சுமிபதி வீட்டில் தான் இருந்தேன் என்று கூறினார் என்றால் தவறு.

14. கூட்டு சதி செய்ததற்கு ஆதாரமாக 19 சென்ட் பதிவு செய்த தேதியும் தாவா சொத்து பதிவு செய்த தேதியும் ஒன்று என்றால் தவறு. 348/1993 வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் போது கூட எனது பாட்டியார் எங்களுடன் தான் இருந்தார் என்றால் சரிதான். எனது பாட்டியார் எங்கள் கூடதான் இருந்தார் என்ற பட்சத்தில் அந்த வழக்கில் எனது தந்தையார் பதிலுரை தாக்கல் செய்யாமல் எனது தாயார் சாந்தகுமாரி மட்டுமே பதிலுரை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த வழக்கை கூட எனது பாட்டியார் நீதிமன்றத்திற்கு நேரடியாக ஆஜராகமல் வழக்கறிஞர் மூலமாகத்தான் மேலெழுத்து செய்யபட்டு தான் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

15. எனது பாட்டியார் எங்கள் வீட்டிலும் இருப்பார் அனுப்பம்பட்டிலும் இருப்பார் என்றால் சரிதான். எனது பாட்டியார் எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எனது தந்தையார் எந்த வருடம் இறந்தார் என்றால் 2019 என்றால் சரிதான். **(21.03.2017 தேதியிட்ட அரசாங்க அறிவிப்பு பி.சா.ஆ–4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த ஆவணத்தில் வழக்கின் சொத்து விவசாயம் செய்யபட்படாமல்

கருவேல மரங்கள் உள்ளது என்று அரசாங்கத்திடம் இருந்து வந்த அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் புல எண் 147/1 மற்றும் 147/3 மொத்த விஸ்தீரனம் 1.60.0 ஏர்ஸ் –ல் கருவேல மரங்கள் வளர்ந்துள்ளதை 25.03.2003–ற்குள் அகற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியாக தெரியவில்லை. இப்போதும் அந்த இடத்தில் கருவேல மரங்கள் தான் வளர்ந்துள்ளன என்றால் சரிதான்.

16. 24.11.1979 தேதியிட்ட எனது தந்தையார் பெயரில் பதிவான ஆவணத்தை நான் இந்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு கூட விஜயலட்சுமியம்மாளின் பெயரில் பட்டா எண் 197 ல் என்று தாக்கலாகி வந்தது என்றால் சரிதான். அதன் பிறகு யு.டி.ஆர் திட்டத்தின் கீழ் பட்டா எண் 197 லிருந்து 223 ஆக மாற்றப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு தெரியாத இந்த விவரங்களளை எல்லாம் எனது தாயார் முன் வழக்கில் பதிலுரையில் தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது தாயாருக்கு தெரிந்து இருந்திருக்கலாம். எனது தாயார் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எல்லாம் சரிதான் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

17. எனது தாயாருக்கும், இராதாகிருஷ்ணநாயுடுவிற்கும் இடையே நடந்த சங்கதிகள் பற்றி எனக்கு ஓரளவிற்கு தெரியும் என்றால் சரிதான். எனது தாயாருக்கும் இவ்வழக்கின் முதலாம் பிரதிவாதிக்கும் இடையே உடண்படிக்ககை ஏற்பட்டதாக பிரதிவாதி தரப்பு சாட்சி 1 மற்றும் 2 முன்பாகவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உடண்படிக்கையில் எனது தந்தையார் சாட்சி யையொப்பமிட்டுள்ளார் என்றால் சரிதான். எனது தாயார் ஒப்பந்தத்தில் கண்டுள்ளது ஒப்பநதம் எழுதி கொடுக்கும் காலத்தில் ஒப்பந்தங்களை தாங்கள் கிரையம் செய்யும் போது வாதிகளாகிய நாங்கள் இருவரும் கையொப்பம் செய்து கொடுக்க நான் சம்மதிக்கிறேன் என்று எனது தாயார் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

18. பி.சா.ஆ 1 மற்றும் 2 மூலமாக சாந்தகுமாரிக்கும், இரத்தினவள்ளியம்மாளுக்கும் இடையே வழக்கறிஞர் அறிவிப்புகள் நடைபெற்றுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த அறிவிப்பிலும், முன்வழக்கிலும் இராதாகிருஷ்ணநாயுடுவே தரப்பினராக உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தற்போது எங்கே வசிக்கிறேன் என்றால் அனுப்பம்பட்டில் வசிக்கிறேன். என் தாயார் இறந்த பிறகு என் தந்தை இந்த வழக்கு சொத்தை 3–ம் தரப்பினருடன் உடண்படிக்கை போட்டுள்ளார் என்றால் இல்லை. இந்த வழக்கு மூலத்தில் 1979–ஐ குறிப்பிட்டுவிட்டு 1993–ஐ குறிப்பிடாமல் 2006 ஐ குறிப்பிட்டுள்ளேன் என்றால் தெரியாது.

19. வழக்குரையில் 4 ம் பத்தியில் கிரையம் பெற்ற நாளில் இருந்து விற்பனை செய்தது எனது தாயார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தட்டச்சு பிழை . வழக்கின் சங்கதிகளை மறைத்தும், பொய்யான வழக்கு மூலங்களை வைத்தும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. கிரைய ஒப்பந்த காலத்தில் இராதாகிருஷ்ணன் மற்றும் இரத்தினவள்ளியம்மாள் சொத்தின் ஸ்வாதீனத்திலிருந்து கிஸ்துகளை செலுத்தி வந்தார்கள் என்றால் இல்லை. எனது பாட்டி வனரோஜாவின் வாாிசுகளுக்கிடையே இன்று வரை எந்த குடும்ப பாகப்பிரிவினையும்

நடைபெறவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. அவ்வாறு பாகப்பிரிவினையும் நடைபெற்று இருந்தால் சொத்தின் முழுவிவரமும் எனக்கு தெரியும் என்றால் வீட்டு மனையாக பிரித்து கொண்டார்கள் எனது தாயார் பணம் செலுத்தி இந்த சொத்தை கிரையம் பெற்றார்.

20. அவ்வாறு பணம் செலுத்தி வாங்கிய ஆவணம் தான் பொய்யாக புணையப்பட்ட ஆவணம் என்று எனது பாட்டியார் மேற் கூறிய வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் தவறு. எனது தாயார் எந்த வித அராசங்க உத்தியோத்திலும் இல்லை. என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் என்று எதுவும் கிடையாது. 1994 ல் ஏற்பட்ட உடண்படிக்கயில் எனது தாயார் மற்றும் எனது தந்தையார் இரத்தினவள்ளியம்மாளிடம் ரூ. 1,45,000 பெற்றார் என்றால் உடண்படிக்கை படித்த பின் தான் எனக்கு தெரியும்.

21. 1987 ல் கிரைய முச்சிலிக்கா மூலம் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் ஸ்வாதீனத்தில் இருந்தார்கள் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனவே 1993 லிருந்து 30 வருட காலமாக பிரதிவாதிகளே ஸ்வாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அதனால் காலவரையறை சட்டத்தின் படி வாதிக்கான உரிமை அற்றுப்போய்விட்டது என்று குறிப்பிட்டால் ஒத்துக்கொள்ள முடியாது. பிரதிவாதிகள் வழக்கு சொத்தின் 12 வருடங்களுக்கு மேலாக ஸ்வாதீனத்தில் இருந்து வந்ததால் எதிரிடை ஸ்வாதீனத்தின் மூலம் வழக்கு சொத்து பிரதிவாதிகளுக்கு உரியது என்றால் ஒத்துக்கொள்ள முடியாது.

22. எனது தாயாரும் , நானும் வழக்கின் சங்கதிகளை மறைத்து வழக்காடி கொண்டு வருகிறோம் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு எதிராக போடப்பட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய வழக்கு என்றால் சரியல்ல. இவ்வழக்கை எனது தாயார் தாக்கல்செய்வதற்கு முன்பு வரை நான் சென்னையில் தான் வாழ்ந்து வந்தேன் என்றும் அனுப்பம்பட்டில் வாழவில்லை என்றும் கூறினால் சரியல்ல. நான் 2005 ல் இருந்து அனுப்பம்பட்டில் தான் இருந்து வருகிறேன். 2005 ற்கு முன்வரை நான் அனுப்பம்பட்டில் இல்லை என்றால் சரிதான். அதனால் இவ்வழக்கு எழுவதற்கு முன்பு எனக்கு ஒருசில விவரங்கள் எனது பெற்றோர்கள் கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

**விசாரணை முடியும் நேரம். 4.20 பி.எம்.**